தினகரன் ஜுன் 16 -2008



தேசிய விருது பெற்ற கோவை அரசு பஸ் கண்டக்டர் யோகநாதனுக்கு போக்குவரத்து கழக ஊழியர்கள் சார்பில் நேற்று பாராட்டு விழா நடந்தது. பஸ் ஊழியர்கள் அவருக்கு நினைவு பரிசு வழங்கினர்.

# 50 ஆயிரம் மரக்கன்று நட்ட கண்டக்டருக்கு தேசிய விருது

## தொழிற்சங்கத்தினர் பாராட்டு விழா

தொண்டாமுத்தூர், ஜுன் 16- கோவையைச் சேர்ந்த அரசு பஸ் கண்டக்டர் 50 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டு, தேசிய விருது பெற்றுள்ளார். அவருக்கு போக்குவரத்து கழக தொழிற்சங்கத்தினர் பாராட்டு விழா நடத்தினர்.

கோவை சிவானந்தா காலனியை சேர்ந்தவர் யோகநாதன் (38). காந்திபுரம்-மருதமலை செல்லும் 70ம் நம்பர் அரசு டவுன் பஸ்சில் கண்டக்டராக பணியாற்றி வருகிறார். சுற்றுசூழல் பாதுகாப்பு கருதி, 50 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டு சாதனை படைத்துள்ளார். இதற்காக ஜனாதிபதி மாளிகையில் நடந்த விழாவில் துணை ஜனாதிபதி அன்சாரி, யோகநாதனுக்கு 'எக்கோ வாரியர்' என்ற தேசிய விருதை வழங்கி பாராட்டினார்.

தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக இந்த விருதை அவர் பெற்றுள்ளார். தேசிய விருது பெற்ற யோகநாதனுக்கு கோவை அரசு போக்குவரத்து கழக மருதமலை பஸ் டெப்போ கிளை அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் நேற்று பாராட்டு விழா நடந்தது.

குழந்தைவேலு தலைமை வகித்தார். குமாரசாமி வரவேற்றார். கோவை மேற்கு கோட்ட மேலாளர் பழனிசாமி, கிளை மேலாளர் துரைசாமி, திருக்குறள் மன்ற தலைவர் தமிழ்வாணன் உள்பட பலர் பாராட்டி பேசினர். அப்போது, தேசிய விருது பெற்ற யோகநாதனை தமிழக அரசு சிறப்பு ஊழியராக பணி அமர்த்தி, சுற்றுசூழல் விழிப்புணர்வு பிரசார ஆர்வலராக பயன்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். விழாவில் ஏற்புரையாற்றி யோகநாதன் பேசுகையில், போக்குவரத்துக்கு துறைக்கு பெருமை சேர்க்கும் விதமாக தேசிய விருது கிடைத்துள்ளது. திங்கட்கிழமை தோறும் மரக்கன்றுகளை நட்டு வந்தேன்.

இனி மற்ற தினங்களிலும் மரக்கன்றுகள் நடுவேன். சுற்றுச்சூழல் விழிப்புணர்வை நம் வீடுகளில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கடைபிடிக்க வேண்டும்.

மரம் நடுவது பற்றி குழந்தைகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். பிளாஸ்டிக்கை, நகபாலீஸ், உதடு சாயம் பூசுவதை தவிர்க்க வேண்டும். இந்நாளை நாம் சுற்றுசூழலை காப்போம் என்ற உறுதிமொழியை எடுத்து கொள்ள வேண்டும். டெல்லியில் நடந்த தேசிய விருது வழங்கும் விழாவில், பஸ் கண்டக்டர் என்று தெரிந்ததும் துணை ஜனாதிபதி இருக்கையை விட்டு எழுந்து வந்து என்னை, நீங்கள் தான் ஹீரோ என்று பாராட்டினார். இந்தபெருமைகள் கிடைக்க முழு ஒத்துழைப்பு அளித்த போக்குவரத்து துறை அலுவலர்களுக்கும், சக ஊழியர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்' என்றார்.

போக்குவரத்து கழக ஊழியர்கள் சின்னதம்பி, விஜயகுமார் உள்பட பலர் பாராட்டி பேசினர்.